# இரக்கமும் இழிநிலையும்

## இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல்

இத்திருத்தூது மடலை வாசிக்கும் அனைவருக்கும் பிரான்சிஸ் இரக்கமும் அமைதியும் அளித்து எழுதுவது, விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை இயேசு சந்தித்த நிகழ்வை (காண். யோவா 8:1–4) விவரிக்கும்போது புனித அகுஸ்தின் 'இரக்கமும் இழிநிலையும்' எனும் சொற்றொடரைப் பயன்படுத்துகின்றார்: "அவர்கள் இருவரும் மட்டுமே இருந்தனர்: இரக்கமான இயேசுவும் இரக்கம் வேண்டி அப்பெண்ணும்"(1). இறைவனின் அன்பு எனும் மறைபொருள் பாவியைத் தொடுவதை, இதைவிட சிறந்த முறையில், அழகான, சரியான முறையில் விவரிப்பது கடினம். இந்த விவரிப்பில் மிளிரும் பேரிரக்கமும் இறை நீதியும்தான் என்னே! இது கற்பிக்கும் பாடம்: இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை முடிக்கும்போது அதன்மீது வெளிச்சமிட்டுக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நாம் நடக்க வேண்டிய பாதையையும் குறித்துக் காட்டுகின்றது.

1. வளமான இரக்கத்தின் காலமாக நாம் கொண்டாடிய புனித ஆண்டின் பாடமாக நற்செய்தியின் இப்பகுதி நமக்கு எளிதாய் விளங்குகிறது. இந்தப் புனித ஆண்டு தொடர்ந்து கொண்டாடப்பட வேண்டும், நம் குழுமங்களில் வாழப்பட வேண்டும். திரு அவையின் வாழ்வில் இரக்கம் அடைப்புக் குறிக்குள் அடங்கிவிடும் ஒன்றாக ஆகிவிடக்கூடாது. நற்செய்தியின் மிக ஆழமான உண்மைகளை காணக் கூடிய விதத்தில் வெளிப்படுத்துவதன் வழியாக இந்த இரக்கம் திரு அவையின் வாழ்வுக்கே காரணமாய் அமைகின்றது. அனைத்தும் இரக்கத்திலே வெளிப்படுத்தப்படுகின்றன. அனைத்தும் தந்தையின் இரக்கம் நிறைந்த அன்பால் தீர்க்கப்படுகின்றன.

ஒரு பெண்ணும் இயேசுவும் சந்திக்கின்றனர். அவள் ஒரு விபச்சாரி. சட்டத்தின் பார்வையில் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவள். இயேசு தனது போதனை வழியாகவும், அவரைச் சிலுவைக்கு இட்டுச் செல்லும் தனது முழுக் கொடையாலும், மோசே சட்டத்தை அதன் உண்மையான தொடக்க நோக்கத்தின்பால் திருப்புகின்றார். இங்கு சட்டமோ சட்டத்தின்படியான நீதியோ முக்கியமல்ல, மாறாக இறை அன்பே முக்கியமானது. இது ஒவ்வொரு மனிதரின் இதயத்திற்குள்ளும் உற்று நோக்கி அதனுள் உறங்கிக் கிடக்கின்ற ஆழமான ஆசைகளை காணவல்லது; இறை அன்பு மற்ற அனைத்திலும் முதன்மை இடம் பெற வேண்டும். இந்த நற்செய்தி விவரிப்பு பாவமும் தீர்ப்பும் கருத்தளவில் சந்திக்கும் ஒன்றல்ல, மாறாக ஒரு பாவியும் அவரது மீட்பரும் சந்திப்பதை விவரிக்கின்றது. இயேசு அப்பெண்ணின் கண்களை உற்றுநோக்கி புரிந்து கொள்ளப்படுவதற்கும், மன்னிக்கப் படுவதற்கும், விடுதலையளிக்கப்படுவதற்குமான ஏக்கம் அவரது இதயத்தில் இருப்பதை கண்டு பிடித்தார். பாவத்தின் இழிநிலை அன்பின் இரக்கத்தால் போர்த்தப்பட்டது. இயேசுவின் ஒரே தீர்ப்பு இந்தப் பாவியின் நிலைக் கண்டு இரக்கத்தாலும் பரிவினாலும் நிறைந்திருந்தது. அப்பெண்ணைத் தீர்ப்பிட்டுச் சாவுக்கு கையளிக்க விரும்பியவர்களுக்கு இயேசு ஒரு நீண்ட அமைதியின் வழி பதில் தருகின்றார். இயேசுவின் நோக்கமெல்லாம் பெண்ணின் மனதில் மட்டுமல்லாது, கற்களை கீழே போட்டுவிட்டு ஒருவர் ஒருவராக காட்சியிலிருந்து மறைந்த (காண் யோவா 8:9) குற்றம் சாட்டியவர்களின் மனசாட்சியிலும் கடவுளின் குரல் கேட்கப்பட வேண்டும் என்பதே. பிறகு இயேசு "அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?. . . நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" (வச. 10–11) என்றார். இயேசு எதிர்காலத்தை எதிர்நோக்கோடு பார்த்து வாழ்வைப் புதியதாய் தொடங்க அப்பெண்ணுக்கு உதவுகின்றார். இனி, அப்பெண் விரும்பினால், அவள் 'அன்பு கொண்டு வாழ' முடியும் (எபே 5:2). இரக்கத்தினால் தொடப்பட்டப் பிறகு பாவத்தின் தீயக் கவர்ச்சி இருந்தாலும், அது அவரை முன்னோக்கிப் பார்க்கச் செய்யும் அன்பினால் மேற்கொண்டு அவரின் வாழ்வை வித்தியாசமாக வாழ உதவுகின்றது.

2. இன்னொரு நிகழ்வில், பரிசேயர் வீட்டில் உணவருந்த அழைக்கப்பட்டபோது அனைவராலும் பாவி என்று அறியப்பட்ட பெண் இயேசுவைச் சந்தித்த நிகழ்விலும் (காண். லூக் 7:36–50), இயேசு

இந்தச் செய்தியைத் தெளிவாக்குகின்றார். அப்பெண் நறுமணத் தைலத்தை அவர் பாதங்களில் ஊற்றினார், அவர் காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்தார், அவற்றைத் தம் கூந்தலால் துடைத்தார் (காண். வச. 37–38). அதைப் பார்த்து இயேசுவின்மீது குறை கண்ட பரிசேயரிடம் இயேசு, "இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்புகூர்ந்தார். குறைவாக மன்னிப்புப் பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர்" (வச. 47) என்றார்.

இறைத் தந்தையின் அன்பில் மிகக் காணக்கூடிய அடையாளம் மன்னிப்பு; இதை இயேசு தன் வாழ்நாள் முழுவதும் வெளிப்படுத்த முயன்றார். மன்னிக்கும்வரை அன்பு செய்யும் அன்பினால் நற்செய்தியின் ஒவ்வொரு பக்கமும் குறிப்பிடப்படுகின்றது. அவரின் உலக வாழ்வின் இறுதி நேரத்திலும், அவர் சிலுவையில் அறையப்பட்டபோதும், இயேசு மன்னிப்பின் வார்த்தைகளைப் பேசினார்: "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23:34).

மனம் வருந்துகின்ற பாவி இறைவனின் இரக்கத்தின் முன் வைக்கின்ற எதுவும் அவரது மன்னிப்பினின்று தள்ளப் படுவதில்லை. எனவே மன்னிப்பை நிபந்தனைக்கு உட்பட்டதாக ஆக்க நம்மில் யாருக்கும் உரிமை இல்லை.

இரக்கம் எப்போதுமே நம் விண்ணகத் தந்தையின் இலவச கொடை, செயல்பாடு. நிபந்தனையற்ற, தகுதி பார்க்காத அன்பின் செயல். எனவே, கடவுள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நுழையும் அவரது அன்பின் சுதந்திரத்தை எதிர்க்கின்ற ஆபத்தை நாம் செய்ய முடியாது. மன்னிப்பின் வழியாக நமது வாழ்வை மாற்றுகின்ற அன்பின் உறுதியான செயல்தான் இரக்கம். இந்த வழியில்தான் இறை இரக்கத்தின் மறைபொருள் வெளிப்படுத்தப்படுகின்றது. இறைவன் இரக்கம் மிகுந்தவர் (காண். விப 34:6); அவரது இரக்கம் என்றுமுள்ளது (காண். திபா 136). தலைமுறைதோறும் அவர்மீது நம்பிக்கை கொள்பவரை அது அரவணைக்கின்றது. இறைவனின் வாழ்விலேயே பங்கு தந்து அவர்களை மாற்றுகின்றது.

3. விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண் மற்றும் பாவியாகிய பெண் எனும் இவ்விரு பெண்களின் இதயத்தில் ஊற்றெடுத்த பெரும் மகிழ்வுதான் என்னே! இறுதியாக மன்னிப்பானது முன்னெப்போதும் இல்லாதபடி அவர்களை சுதந்திரமாகவும் மகிழ்வாகவும், உணரச் செய்தது. அவர்களுடைய வெட்கத்தின் கண்ணீரும், வலியும், தாங்கள் அன்பு செய்யப்படுகின்றோம் என உணரும் நபரின் புன்னகையாக மாற்றப்பட்டது. இரக்கம் மகிழ்வைத் தோற்று விக்கிறது. ஏனெனில் நம் இதயங்கள் புது வாழ்வின் எதிர்நோக்கிற்கு திறக்கப்படுகின்றன. மன்னிப்பின் மகிழ்வு விவரிக்க முடியாதது. இருப்பினும் எப்போதெல்லாம் நாம் மன்னிப்பை அனுபவிக்கின்றோமோ அது நம்மைச் சுற்றி ஒளிர்கின்றது. அதன் ஊற்று, நம்மைச் சுற்றியுள்ள சுயநலம் எனும் தடைச் சுவர்களை உடைத்து நம்மை இரக்கத்தின் கருவிகளாக மாற்ற நம்மைச் சந்திக்க வருகின்ற, கடவுளின் அன்பில் உள்ளது.

தொடக்கக் கால கிறிஸ்தவர்களை வழிநடத்திய பழங்கால வார்த்தைகள் இச்சூழலில் எவ்வளவு பொருள் பொதிந்தவை: "எப்போதும் கடவுளுக்கு ஏற்புடையதும் ஒத்துக்கொள்ளக் கூடியதுமான மகிழ்வினால் உங்களை போர்த்திக் கொள்ளுங்கள். அதிலே அகமகிழுங்கள். ஏனெனில் மகிழ்ந்திருக்கிறவர்கள் நல்லதை செய்கிறார்கள், நல்லதை நினைக்கின்றார்கள், சோகமாயிருப்பதை வெறுக்கின்றார்கள். துன்பத்தைப் புறந்தள்ளி, மகிழ்வை அணிந்து கொள்கிறவர்கள் கடவுளில் வாழ்வார்கள்"(2). இரக்கத்தின் அனுபவம் மகிழ்வைக் கொண்டு வருகின்றது. நம் துன்பங்களாலும், கவலைகளாலும் நமது மகிழ்வு நம்மிடமிருந்து பறிக்கப்பட நாம் அனுமதிக்காமல் இருப்போமாக. அது நம் இதயங்களில் வேரூன்றப்பட்டு நமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளை மன அமைதியுடன் சந்திக்க உதவுவதாக.

தொழில் நுட்ப, ஆதிக்கக் கலாச்சாரத்தில், துன்பமும் தனிமையும் வளர்ந்து கொண்டேயிருப்பதாகத் தோன்றுகிறது. இளையோரிடமும் இது குறைவதாய் இல்லை. நிலைத்த தன்மையை உருவாக்காது நிச்சயமற்ற தன்மைக்கு எதிர்காலம் இறையாகிப்போனது போலத் தோன்றுகிறது. இது மன உளைச்சலுக்கும், சோகத்திற்கும், சலிப்புத் தன்மைக்கும் இடம் தருகின்றது. இவை கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையற்ற நிலைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. செயற்கைத் தனமான சொர்க்கங்கள் வழி, எளிதான மற்றும் உடனடி மகிழ்வை வாக்களிக்கும் மாயைகளை நாம் துரத்தியடிக்க வேண்டுமானால் எதிர்நோக்கிற்கும் உண்மையான

மகிழ்விற்குமான சான்றுகள் நமக்கு தேவை. நாம் நமது இதயத்தில் தாங்கும் எதிர்நோக்கு மற்றும் அது தரும் மகிழ்வின் வழியாகவும் பெரும்பான்மையான மக்களால் உணரப்படும் மிக ஆழமான வெறுமை உணர்வை மேற்கொள்ள முடியும். இரக்கத்தால் தொடப்படும் இதயத்தில் எழும் மகிழ்வை நாம் அங்கீகரிக்க வேண்டும். "ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்" (பிலி 4:4; காண். 1 தெச 5:16) எனும் திருத்தூதரின் வார்த்தைகளை மனதில் கொள்வோமாக.

4. பெருமளவில் இரக்கத்தின் அருளைப் பெற்ற யூபிலி ஆண்டை விமரிசையாக கொண்டாடினோம். பெருக்கெடுக்கும் முழுமையான புயல் போல ஆண்டவரின் நன்மைத் தனமும் இரக்கமும் உலகம் அனைத்தின்மீது பொழியப்பட்டன. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்புப் பார்வையை மிக நீண்ட காலம் அனுபவித்திருக்கின்றோம். நாம் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது. ஏனெனில் அது நம் வாழ்வை மாற்றுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவருக்கு நன்றி செலுத்த வேண்டிய தேவையை உணர்கின்றோம். "ஆண்டவரே! உமது நாட்டின்மீது அருள்கூர்ந்தீர்;. . . உமது மக்களின் குற்றத்தை மன்னித்தீர்" (திபா 85:1–2) என்று கூற விழைகின்றோம். அதுதான் உண்மை. கடவுள் நம் குற்றங்களை அடக்கிவிட்டார் மற்றும் நமது அனைத்து பாவங்களையும் ஆழ்கடலில் எறிந்து விட்டார் (காண். மீக் 7:19). பாவங்களை தனது முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டதால் அவர் அவற்றை இனிமேல் நினைவு கூர்வதில்லை (காண் எசா 38:17). மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ அத்துணைத் தொலைவிற்கு நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார் (காண். திபா 103:12). இந்த புனித ஆண்டில், மன்னிப்புப் பற்றிய இயேசு கிறிஸ்துவின் கட்டளையையும் கொடையையும் தெளிவாக காண தூய ஆவியோடு உதவிய தந்தையின் உடனிருப்பையும் நெருக்கத்தையும் திரு அவை கவனமுடன் செவிமடுத்தது, ஆழ்ந்து அனுபவித்தது. ஆண்டவர் நம்மை உண்மையாகவே புதிதாய் சந்தித்தது போல இருந்தது. அவரது வாழ்வு தரும் மூச்சுக்காற்று திரு அவையின்மீது ஊற்றப்பட்டது போல நாம் உணர்ந்தோம். "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாது இருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" (யோவா 20:22–23) எனும் அவரது வார்த்தைகள் மீண்டும் ஒருமுறை நமது பணியை நமக்கு சுட்டிக்காட்டின.

5. இப்போது, யூபிலி ஆண்டின் முடிவிலே, எதிர்காலத்தை கண்முன் கொண்டு மகிழ்வோடும், பிரமாணிக்கத்தோடும், உற்சாகத்தோடும் இறை இரக்கத்தின் செல்வத்தை அனுபவித்துக் கொண்டு இவற்றை எந்த அளவுக்கு சிறப்பாய் தொடர முடியும் என புரிந்துகொள்ள வேண்டிய நேரமிது. நாம் அழைக்கப்பட்டுள்ள "மேய்ப்புப்பணி மனமாற்றம்"[3] இரக்கத்தின் ஆற்றலை நாள்தோறும் புதுப்பிப்பதற்கு ஏற்ப நம் குழுமங்கள் புதிய நற்செய்திப் பணியில் உயிர்த்துடிப்புடனும் உற்சாகமாகவும் இருக்க முடியும். அதன் செயல்களை குறுக்கிவிடாமல் இருப்போமாக, ஒவ்வொருவருக்கும் மீட்பின் நற்செய்தியை கொண்டு வருவதில் புதிய பாதைகளைத் தேர்ந்தெடுக்க தொடர்ந்து சுட்டிக்காட்டும் ஆவிக்கு வருத்தம் தராதிருப்போமாக.

முதலாவதாக, நாம் இரக்கத்தைக் *கொண்டாட* அழைக்கப்படுகின்றோம். திரு அவை கடவுளை இரக்கத்தின் தந்தை என்று அழைக்கின்றபோது திரு அவையின் இறைவேண்டலில் எத்தகைய அரும் வளங்கள் பொதிந்துள்ளன! திருவழிபாட்டில் இரக்கம் திரும்பத் திரும்ப வேண்டப்படுவதோடு உண்மையாகவே பெறப்பட்டு அனுபவிக்கப்படுகின்றது. திருப்பலிக் கொண்டாட்டத்தின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வேண்டுகின்ற திருக்கூட்டத்திற்கும் அவரது இரக்கமுள்ள அன்பைப் பொழிவதில் மகிழ்கின்ற தந்தையின் இதயத்திற்கும் இடையே நடக்கும் உறவாடலில் இரக்கம் தொடர்ந்து காணப்படுகின்றது. "ஆண்டவரே இரக்கமாயிரும்" எனும் வேண்டுதல் வழி மன்னிப்புக்காக முதலில் வேண்டிய பிறகு, உடனடியாக "எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்து செல்வாராக" என்று உறுதியளிக்கப்படுகின்றோம். இந்த நம்பிக்கையில், குறிப்பாக ஆண்டவரின் உயிர்ப்பின் புனித நாளில், திருக்கூட்டம் ஆண்டவரின் திருமுன்னிலையில் கூடுகின்றது. "சபை மன்றாட்டுகள்" பல இரக்கத்தின் பெரும் கொடையை நமக்கு நினைவூட்டுவதற்காக அமைக்கப்பட்டவை. உதாரணத்திற்கு தவக்காலத்தில், "இரக்கத்தின் ஊற்றாகிய இறைவா

தவமும் செபமும் பகிர்ந்து வாழ்வதுமே பாவங்களுக்குப் பரிகாரமாகும் எனக் கற்பிக்கின்றீர்; இவற்றைச் செய்யத் தவறிய நாங்கள் எங்கள் தாழ்நிலையை உணர்ந்து ஏற்றுக் கொள்கின்றோம். பாவச் சுமையால் தளர்ந்துள்ள எங்களைத் தயவாய்க் கண்ணோக்கித் திடப்படுத்தியருளும்''[4] என்று மன்றாடுகின்றோம். பிறகு மாபெரும் நற்கருணை மன்றாட்டின் நன்றியுரையில் மூழ்கி நாம் இவ்வாறு அறிக்கையிடுகின்றோம்: ''ஏனெனில் இறைவா, நீர் உலகை எந்த அளவுக்கு அன்பு செய்தீர் எனில் உமது இரக்கத்தில் எங்களுக்கு மீட்பரை அனுப்பினீர். அவர் பாவம் தவிர மற்ற அனைத்திலும் எங்களைப் போல வாழ்ந்தார்''[5]. நான்காம் நற்கருணை மன்றாட்டு கடவுளின் இரக்கத்திற்கான பாடலாக அமைகின்றது: ''உம்மைத் தேடுவோர் கண்டடையும் பொருட்டு இரக்கத்துடன் அனைவரின் உதவியாக வந்தீர்.'' ''எங்கள் அனைவர்மீதும் இரக்கமாயிரும்''[6] என்பது நற்கருணை மன்றாட்டில் நிலைவாழ்வில் பங்கு வேண்டும் என்ற அருள்பணியாளரின் தொடர் வேண்டுதலாகும். ''விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே'' எனும் இறைவேண்டலுக்குப் பிறகு அருள் பணியாளர் அமைதிக்காகவும் பாவத்திலிருந்து விடுதலைக் காகவும் ''உமது இரக்கத்தின் உதவியால்'' என்று சொல்லி வேண்டுகின்றார். மன்னிப்பு பெற்றுக் கொண்டதன் ஒளியில் தோழமை மற்றும் ஒருவருக்கொருவரின் அன்பின் அடையாளமான அமைதியின் அடையாளத்தை பரிமாறுவதற்கு முன்: ''எங்கள் பாவங்களைப் பாராமல் உமது திரு அவையின் நம்பிக்கையை கண்ணோக்கி''[7] எனும் இவ்வார்த்தைகளின் வழி தாழ்மையான நம்பிக்கையுடன் தூயத் தாய் திரு அவையின் ஒற்றுமை மற்றும் அமைதி ஆகிய கொடை களுக்காக வேண்டுகின்றோம். இறை இரக்கத்தின் கொண்டாட்டம் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் வெளிப்பாடாக, மனிதரின் மீட்புக்கும், அவரது வரலாற்றுக்கும் ஏன் அகில உலகத்திற்குமே மீட்பைத் தருகின்ற, நற்கருணைப் பலியில் முழுநிறைவை அடைகிறது. சுருங்கக்கூறின், நற்கருணை கொண்டாட்டத்தின் ஒவ்வொரு நொடியும் கடவுளின் இரக்கத்தை குறித்துக் காட்டுகின்றது.

அருளடையாள வாழ்வில் இரக்கம் பெரும் அளவில் அருளப்படுகின்றது. ''நலம் அருளும் அருளடையாளங்களான'' ஒப்புரவு அருளடையாளம் மற்றும் நோயில்பூசுதல் ஆகியவற்றில் திரு அவை இரக்கத்தை வெளிப்படையாக குறிப்பிடுவதில் பொருள் இல்லாமல் இல்லை. முதலாவது, பாவ மன்னிப்பு மன்றாட்டில், ''இரக்கம் நிறைந்த தந்தையாகிய இறைவன், தம் திருமகனின் இறப்பு மற்றும் உயிர்ப்பினால் உலகைத் தம்முடன் ஒப்புரவாக்கிய இறைவன், பாவ மன்னிப்புக்காகத் தூய ஆவியைப் பொழிந்த இறைவன் திரு அவையின் திருப்பணி வழியாக உமக்கு மன்னிப்பும் அமைதியும் அருள்வாராக''[8]. இரண்டாவது, நோயில்பூசுதலின் போது இவ்வாறு இறைவேண்டல் செய்கின்றோம். ''இப்புனித பூசுதலினாலும், தம் அன்பு மிகுந்த இரக்கத்தாலும், ஆண்டவர் தூய ஆவியின் அருளைப் பொழிந்து உமக்குத் துணைபுரிவாராக''[9]. திரு அவையின் வேண்டலில் இரக்கத்தைப் பற்றிய குறிப்பு வெறும் வேண்டுகோளாக இல்லாமல் உயர் நிலையில் செயலாக்கம் உடையதாக உள்ளது. அதாவது, நாம் நம்பிக்கையோடு இரக்கத்தை இறைஞ்சுகின்ற போது அது நமக்கு வழங்கப்படுகின்றது. அது அவசியமான தாகவும் உண்மையானதாகவும் அறிக்கையிடப்படும்பொழுது அது நம்மை உண்மையாகவே உருமாற்றுகிறது. இதுதான் நமது நம்பிக்கையின் அடிப்படைக்கூறு. இதைத் தொடர்ந்து நமது சிந்தையில் இருத்த வேண்டும். பாவத்தைப் பற்றிய வெளிப்பாட்டுக்கு முன்பாக கடவுள் உலகையும் மானுடத்தையும் படைத்த அன்பின் வெளிப்பாடு உள்ளது. கடவுள் தம்மை நமக்கு வெளிப்படுத்துவதும், நம்மை சந்திக்க வருவதுமே அன்பின் முதல் செயல்பாடு. எனவே நாம் நமது இதயங்களைத் திறந்து கடவுள் நம்மீது கொண்ட அன்பை நம்புவோமாக. நமது பாவத்தையும் கடந்து, அவரது அன்பு நம்முன் நடக்கின்றது, உடன் பயணிக்கின்றது, நம்மோடு இருக்கின்றது.

6. இந்தச் சூழலில், *இறைவார்த்தையைக் கேட்பது* குறிப்பிட்ட முக்கியத்துவம் பெறுகின்றது. ஆண்டவரின் நாள் பாஸ்கா மறைபொருளால் ஒளியூட்டப்பட[10] ஒவ்வொரு ஞாயிறும் கிறிஸ்தவ குழுமங்களில் இறைவார்த்தை அறிவிக்கப்படுகின்றது. திருப்பலிக் கொண்டாட்டத்தில், கடவுளுக்கும் அவரது மக்களுக்கும் இடையே உண்மையான உரையாடலைக் காண்கிறோம். விவிலிய வாசிப்பில், கடவுளின் ஓய்வில்லாத இரக்கச் செயல்களை அறிவிப்பதன் வழியாக நமது மீட்பின் வரலாற்றை மீண்டும் கண்டுபிடிக்கின்றோம். நண்பர்களிடம் பேசுவதுபோல ஆண்டவர் இன்றும் தொடர்ந்து பேசுகின்றார்; நம் உடன் பயணிக்கவும் வாழ்வின் வழியைக் காண்பிக்கவும் அவர் நம்மிடையே வாழ்கின்றார்[11]. அவரின் வார்த்தை நமது உள்ளார்ந்த தேவைகளுக்கும் கவலைகளுக்கும் குரல் கொடுக்கின்றது. நாம் காணக்கூடிய விதத்தில் நம்முடன் அவரது

நெருக்கத்தை அனுபவிக்கும்படி பயனுள்ள பதிலை அளிக்கின்றது. எனவே நம்பிக்கையாளர்களின் இதயங்கள் இரக்கத்தின் பிரமாண்டத்தின்முன் திகைப்படையும்படி "உண்மை அழகோடும் நன்மைத் தனத்தோடும் கைகோர்த்து செல்லும்"[12] *மறையுரை* முக்கியத்துவம் பெறுகின்றது. மறையுரை தயாரிப்பதிலும், அதை ஆற்றுவதிலும் பெரும் அக்கறை காட்டப்பட வேண்டும் என நான் வலியுறுத்தி உற்சாகப்படுத்து கின்றேன். அருள்பணியாளர் தான் ஆண்டவரின் இரக்கமிக்க நன்மைதனத்தை அனுபவித்த அளவுக்கே அவரது போதனை பயன் அளிக்கும். கடவுள் நம்மை அன்பு செய்கின்றார் எனும் உண்மையை அறிவிப்பது என்பது வாதத் திறன் சார்ந்த ஒன்று அல்ல, மாறாக ஒருவரின் குருத்துவத்தின் நம்பகத் தன்மையின் நிபந்தனை ஆகும். இரக்கத்தைத் தனிப்பட்ட முறையில் அனுபவிப்பது மேய்ப்புப் பணியில் அதை உண்மையான ஆறுதல் மற்றும் மனமாற்றத்தின் செய்தியாக்குவதற்கு சிறந்த வழியாகும். மறையுரையும் மறைக்கல்வியும் கிறிஸ்தவ வாழ்வின் துடிக்கும் இதயத்தால் தாங்கப்பட வேண்டும்.

7. அற்புதமான கடவுளின் இரக்கத்தின் பெரும் கதையே *திருவிவிலியம்* ஆகும். அதன் ஒவ்வொரு பக்கமும் படைப்பின் தொடக்கத்திலிருந்து தமது அன்பின் அடையாளத்தை அகிலத்தின் மீது பதியவைக்க ஆசைப்பட்ட தந்தையின் அன்பில் தோய்க்கப்பட்டுள்ளது. ஞானநூல்கள் மற்றும் இறைவாக்கினர்களுடைய வார்த்தைகளின் வாயிலாக தூய ஆவியார் இஸ்ரயேலரின் வரலாற்றை மக்களின் பிரமாணிக்கமின்மையைக் கடந்து கடவுளின் மென்மைத்தன்மை மற்றும் நெருக்கத்தின் அங்கீகரிப்பாக உருவாக்கியிருக்கிறார். இயேசுவின் இரக்கம் மற்றும் மன்னிப்பு (காண். யோவா 20:23) நிலைத்த கருவியாய் இருக்கும்படி இயேசு இட்ட கட்டளையைத் தமது பணியாகக் காண்கிற கிறிஸ்தவ சமூகத்தின் வரலாறாகவே இயேசுவின் வாழ்வும் போதனையும் குறிக்கப்படுகின்றன. திரு அவையின் நம்பிக்கையால் உயிரோட்டமுடன் வைக்கப்படும் மறைநூலின் வழியாக, ஆண்டவர் தமது மணவாட்டியுடன் தொடர்ந்து பேசுகின்றார். இதன் வழி மீட்பின் நற்செய்தி எல்லாரையும் சென்றடைய அது எடுக்க வேண்டிய பாதையை அவர் அவளுக்கு காட்டுகின்றார். கடவுளின் வார்த்தை பெருமளவில் கொண்டாடப்பட வேண்டும், அறியப்பட வேண்டும் மற்றும் பரப்பப்பட வேண்டும் என பெரிதும் ஆசிக்கின்றேன். இதன் வழியாக, இத்தகைய இரக்கத்தின் ஊற்றிலிருந்து வழிந்தோடும் அன்பின் மறைபொருள் இன்னும் சரியாக புரிந்துகொள்ளப்படுவதாக. திருத்தூதர் நமக்கு தெளிவாக கூறுவது போல, "மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்று விப்பதற்கும் பயனுள்ளது" (2 திமொ 3:16).

ஒவ்வொரு கிறிஸ்தவ குழுமமும் திருவழிபாட்டு ஆண்டின் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் திருநூல் அதிகம் அறியப்படவும் அதிக அளவில் பரப்பப்படவும் தனது முயற்சியைப் புதுப்பித்தால் எவ்வளவோ பயனுள்ளதாக இருக்கும். ஆண்டவருக்கும் அவரது மக்களுக்கும் இடையே நிகழும் தொடர் உரையாடலைக் கொண்டுள்ள குறைவுபடாத செல்வத்தைப் பாராட்டும் பொருட்டு இறைவார்த்தைக்கென்றே முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஞாயிறாக அது அமையும். இறை வார்த்தையைப் பரப்பும், வாழும் கலங்களாக இறைமக்கள் மாற ஒரு வாய்ப்பாக அமைய படைப்பாற்றலுள்ள முயற்சிகள் உதவும். இத்தகைய முயற்சிகளுள் 'இறை வாசிப்பு' எனும் முயற்சியும் உள்ளடங்கும். வேண்டலுடன் கூடிய திருநூல் வாசிப்பு ஆன்மீக வாழ்வுக்கு உதவியாகவும் அதைத் திடப்படுத்துவதாகவும் அமையும். இரக்கத்துடன் தொடர்புடைய தலைப்புகளை மையமாகக் கொண்ட இத்தகைய வாசிப்பு, திரு அவையின் ஆன்மீக மரபில் வாசிக்கப்படும்போது, விவிலியப் பகுதியின் பெரும் பயன்கள் தனி நபர் அனுபவத்திற்கு உதவும். இவ்வாறு தெளிவான மனித நேயச் செயல்கள் தோன்றும்.[13]

8. *ஒப்புரவு அருளடையாளத்தில்* சிறப்பான விதத்தில் இரக்கத்தின் கொண்டாட்டம் நிகழ்கின்றது. இங்கு நாம் நம்மை சந்திக்க வருகின்ற, நாம் மீண்டும் ஒருமுறை அவரது மகனாகவும் மகளாகவும் வாழ வைக்கும் அருளை அருளுகின்ற, தந்தையின் அரவணைப்பை உணர்கின்றோம். நாம் பாவிகள் மற்றும் நாம் செய்ய விரும்புவதற்கும் உண்மையில் செய்வதற்கும் உள்ள (காண். உரோ 7:14–21) முரண்பாட்டின் பளுவைச் சுமக்கின்றோம். ஆனால் அருள் எப்போதும் முன்னிடம் பெருகின்றது; மற்றும் நமது ஒப்புரவையும் மன்னிப்பையும் விளைவிக்கின்ற இரக்கத்தின் முன் நம்மை நிறுத்துகின்றது. நாம் பாவிகள் என்று உணருகின்றபோதே கடவுள் நம்மீது கொண்ட பேரன்பை நமக்கு புரிய வைக்கின்றார். அருள்

பாவத்தை விட வலிமையானது: எதிர்ப்பின் எவ்வகையையும் அது மேற்கொள்கிறது. ஏனெனில் அன்பு அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும் (காண். 1 கொரி 13:7).

மன்னிப்பின் அருளடையாளத்தில் கடவுள் அவரிடம் திரும்பும் வழியைக் காண்பிக்கின்றார். மற்றும் அவரின் நெருக்கத்தைப் புதிதாய் அனுபவிக்க அழைக்கின்றார். இந்த மன்னிப்பு, அனைத்திற்கும் முதலாய் பிறரன்புடன் வாழத் தொடங்குவதன் வழியாக பெறப்படலாம். "அன்பு திரளான பாவங்களையும் போக்கும்" (1 பேது 4:8) என்று எழுதியதன் வழியாக திருத்தூதர் பேதுரு இதை நமக்கு கூறுகின்றார். கடவுள் ஒருவரே பாவங்களை மன்னிக்கின்றார். ஆனால் அவர் நம்மை மன்னிப்பது போல நாம் மற்றவரை மன்னிக்கத் தயாராயிருக்க நம்மை கேட்டுக்கொள்கிறார். "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத் 6:12). நம் இதயங்கள் மூடப்பட்டு மன்னிக்க முடியாதது எவ்வளவு வருந்தத்தக்கது. எதிர்ப்பு, கோபம் மற்றும் பழிவாங்கும் எண்ணம் மேலோங்குகிறது, அப்போது நமது வாழ்வைப் பரிதாபத்துக் குள்ளாக்குகிறது, மகிழ்வுடன் இரக்கத்துக்கு நம்மை அர்ப்பணிப்பதைத் தடுக்கின்றது.

9. யூபிலி ஆண்டில் திரு அவை பெரும் பயனுள்ள விதத்தில் அருளை அனுபவிக்க உதவியது *இரக்கத்தின் தூதுவர்களின்* பணி ஆகும். அவர்களின் மேய்ப்புப் பணி கடவுள் மனம் வருந்தும் இதயத்தோடு தம்மைத் தேடுபவர்களின் வழியில் எத்தகைய தடைகளையும் வைப்பதில்லை என்பதை வலியுறுத்த முயல்கின்றது. ஏனெனில் அவர் ஒரு தந்தையைப் போல ஒவ்வொருவரையும் சந்திக்கச் செல்கிறார். ஒப்புரவு அருளடையாளத்தில் ஆண்டவரை மீண்டும் ஒருமுறை சந்தித்தவர்களின் மகிழ்வான சாட்சியங்களை நான் பெற்றிருக்கிறேன். நமது நம்பிக்கையை ஒப்புரவின் அனுபவமாகவும் வாழும் வாய்ப்பை நாம் இழக்காமல் இருப்போமாக. இன்றும் திருத்தூதர் நம்மை இவ்வாறு அழைக்கின்றார்: "கடவுளோடு ஒப்புரவாகுங்கள்" (2 கொரி 5:20). எனவே நம்புவோர் அனைவரும் "புது படைப்பாய்" மாற்றும் (2 கொரி 3:17) அன்பின் ஆற்றலை கண்டுபிடிக்க முடியும்.

மன்னிப்பின் அருளை பயனுள்ள விதத்தில் அளிக்கும் நோக்குடன் நிறுவப்பட்ட இரக்கத்தின் தூதுவர்களுக்கு அவர்களின் மதிப்புமிக்க பணிக்காக நன்றி கூறுகின்றேன். இந்த உயர் சிறப்புமிக்க பணி புனித கதவுகளை மூடியதோடு முடிந்துவிடவில்லை. யூபிலி ஆண்டின் அருள் உலகம் முழுவதும் துடிப்புடனும், பயனுள்ள விதத்திலும் தொடர்ந்து இருக்கின்றது என்பதன் காணக்கூடிய அடையாளமாக அடுத்த அறிவிப்பு வரும் வரை அது தொடர வேண்டும் என ஆசிக்கின்றேன். இரக்கத்தின் தூதுவர்களோடு எனக்கு இருக்கும் கவலை மற்றும் நெருக்கத்தின் நேரடி வெளிப்பாடாக இந்த காலக் கட்டத்தில், புதிய நற்செய்தி அறிவிப்பை ஊக்கப்படுத்தும் பாப்பிறைக் குழு அவர்களைக் கண்காணித்து இந்த மதிப்புள்ள பணியைச் செயல்படுத்தும் தகுந்த சிறந்த வழிமுறைகளைக் கண்டுபிடிக்கும்.

10. அருள்பணியாளர் ஒப்புரவு அருளடையாளப் பணிக்கு தங்களைக் கவனமுடன் தயாரிக்க மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுக்கின்றேன். உங்களின் பணிக்காக என் இதயத்தின் ஆழத்திலிருந்து உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். எல்லோரையும் அன்புடன் *வரவேற்கவும்*, பாவத்தின் பளு எத்தகையதாக இருந்தாலும், தந்தைக்குரிய மென்மைத் தன்மையின் *சான்றுகளாக* இருக்கவும், பாவமன்னிப்பு வேண்டுவோர் தாங்கள் செய்த தவற்றைப் பற்றி சிந்திப்பதற்கு உதவுவதில் *கவனமுடையவராகவும்,* அறநெறி கோட்பாடுகளை அளிப்பதில் *தெளிவானவர்களாகவும்,* நம்பிக்கையாளர்கள் தங்கள் மனமாற்ற பயணத்தில் பொறுமையுடன் உடன்நடக்க *மனதுள்ளவர்களாகவும்*, தனித்தனி சிக்கல்களைத் தீர்ப்பதில் *தொலைநோக்குடையவர்களாகவும்* மற்றும் கடவுளின் மன்னிப்பை வழங்குவதில் *தாராளமுடையவர்களாகவும்* இருக்கும்படி அருள்பணியாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை மரண தண்டனையிலிருந்து காப்பாற்ற இயேசு அமைதியாயிருக்கும் நிலைப்பாடு எடுத்தது போல, ஒவ்வொரு அருள்பணியாளரும் பாவமன்னிப்பு தொட்டியில் திறந்த மனதுடையவராக இருக்க வேண்டும். ஏனெனில் மனந்திரும்பும் ஒவ்வொரு பாவியும் அருள்பணியாளருக்கு தான் ஒரு பாவி; ஆனால் அதே நேரத்தில் இரக்கத்தின் பணியாளர் என்பதை நினைவூட்டுகிறார்.

11. திருத்தூதர் பவுல் திமோத்தேயுவிடம் தான் பாவிகளுள் முதன்மையான பாவி என்றும் "ஆயினும் கடவுள் எனக்கு இரங்கினார்" (1 திமொ 1:16) என்றும் அறிக்கையிடும் வார்த்தைகளை

நாம் அனைவரும் தியானிக்க வேண்டும் என விரும்புகின்றேன். பவுலடியாரின் ஆற்றலுள்ள வார்த்தைகள் நமது வாழ்வைப் பற்றி சிந்திக்கவும் மற்றும் நமது இதயங்களின் மாற்றத்திலும், மனமாற்றத்திலும், உருமாற்றத்திலும் கடவுளின் இரக்கம் செயல்படுகிறது என்பதைக் காணவும் உதவுகின்றது: "எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில் நான் நம்பிக்கைக்கு உரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார். முன்னர் நான் அவரைப் பழித்துரைத்தேன்; துன்புறுத்தினேன்; இழிவுபடுத்தினேன். ஆயினும் நம்பிக்கை கொண்டிராத நிலையில் நான் அவ்வாறு நடந்ததால் அவர் எனக்கு இரங்கினார்" (1 திமொ 1:12–13). புதுப்பிக்கப்பட்ட மேய்ப்புப்பணி ஆர்வத்துடன் திருத்தூதரின் இன்னொரு மேற்கோளை நினைவில் கொள்வோம்: "அவரே (கடவுளே) கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்; ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார்" (2 கொரி 5:18). இத்திருப்பணியின் பார்வையில் நாம் தான் முதலில் மன்னிக்கப்பட வேண்டியவர்கள், கடவுளின் மன்னிப்பின் பொதுமைத் தன்மையின் முதல்நிலை சான்றுகளாக மாற்றப்பட வேண்டியவர்கள். தான் பாவம் செய்துவிட்டதை ஏற்றுக் கொண்டு மீண்டும் வாழ்வைப் புதிதாய் தொடங்க விரும்பும் மகனை / மகளை மீண்டும் ஒருமுறை அரவணைக்கக் கடவுளை எந்த சட்டமும் கட்டளையும் தடுக்க முடியாது. சட்டத்தின் நிலையிலேயே இருப்பது நம்பிக்கையையும் இறை இரக்கத்தையும் தடுப்பதற்கு சமமாகும். பிறரன்பை அதன் இலக்காகக் கொண்ட (காண். 1 திமொ 1:5) சட்டம் ஒரு கற்பிக்கும் மதிப்புடையது (காண். கலா 3:24). "வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம்" (உரோ 8:2) எனும் நற்செய்தியின் புதுமையை அனுபவிக்க கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். மிகவும் சிக்கலான பிரச்சனைகளில் கூட, அதாவது சட்டத்தின் அடிப்படையில் மட்டும் நீதி வழங்க ஏற்படும் சோதனையிலும், இறை அருளிலிருந்து பெருகும் ஆற்றலில் நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். பாவ மன்னிப்பு வழங்குபவர்களாகிய நாம் கண்முன் பல மனமாற்றங்கள் நிகழ்ந்ததை அனுபவித்திருக்கின்றோம். எனவே, மனம் மாறுபவரின் இதயத்தைத் தொட்டு மன்னிக்கின்ற தந்தையின் நெருக்கத்தையும் மென்மைத் தன்மையையும் அவர்கள் கண்டுபிடிக்க உதவும் செயல்களுக்கும், வார்த்தைகளுக்கும் நாம் பொறுப்பு என்பதை உணர்ந்து இருக்கின்றோம். மனம்மாற விரும்புகிறவர் தேடும் இரக்கத்தின் அனுபவங்களுக்கு எதிராக செயல்பட்டு மனமாற்றத்திற்கான வாய்ப்புகளை இழந்து விடாமல் இருப்போமாக. அதற்கு மாறாக, தனி நபரின் மனச் சான்றுக்கும் கடவுளின் நிரந்தர அன்புக்கும் (காண். 1 யோவா 3:20) இடையே இருக்கும் இடைவெளியை எளிதாக்க உதவுவோமாக.

கிறிஸ்தவ வாழ்வில் ஒப்புரவு அருளடையாளம் தனது மைய இடத்தை மீண்டும் பெற வேண்டும். இதற்கு தங்களின் வாழ்வை "ஒப்புரவாக்கும் திருப்பணியில்" (2 கொரி 5:18) செலவிடும் அருள்பணியாளர் தேவை. மனம்மாறுகின்றவர் திரும்ப வருவதை எதிர்பார்த்திருக்கும் தந்தையின் அன்பிடம் ஈர்க்கப்படுவதைத் தடுக்காது, அதே வேளையில், ஒவ்வொருவருக்கும் மன்னிப்பால் வரும் விடுதலையின் ஆற்றலை அனுபவிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட வேண்டும்.

இதற்குச் சாதகமான ஒரு சூழல் தவக்காலத்தின் நான்காம் ஞாயிறுக்கு அண்மையில் நடைபெறும் *ஆண்டவருக்கு என்று 24 மணி நேரம்* எனும் நிகழ்வாகும். பல மறைமாவட்டங்களில் ஏற்கனவே பழக்கத்திலிருக்கும் இம்முயற்சி ஒப்புரவு அருளடையாளத்தின் உளப்பூர்வமான அனுபவத்தை மேலும் ஊக்குவிக்கும் ஒரு பெரும் மேய்ப்புப் பணி மதிப்பீடு ஆகும்.

12. இத்தகைய ஒரு தேவையின் அடிப்படையில் கடவுளின் மன்னிப்புக்கும் ஒப்புரவு அருளடையாளத்தை வேண்டுவதற்கும் இடையே எத்தகைய தடையும் ஏற்படாமல் இருக்க, அனைத்து அருள்பணியாளருக்கும் தங்கள் பணியில், கருக்கலைப்பு செய்தல் எனும் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை வழங்குகிறேன். சிறப்பு யூபிலி ஆண்டில்[14] இது குறித்து நான், சிறப்பு, யூபிலி ஆண்டில் வழங்கிய மன்னிக்கும் அதிகாரம், இதற்கு மாறுபட்ட எதையும் கட்டுப்படுத்தாமல், நீட்டிக்கப் படுகிறது. கருக்கலைப்பு மாசற்ற உயிரை முடிவுக்கு கொண்டுவருவதால் அது கொடும் பாவம் என மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அதே போல மனமாறும் ஓர் இதயம் தந்தையோடு ஒப்புரவாகத் தேடும்போது கடவுளின் இரக்கம் நீளாத, அழிக்க முடியாத பாவம் ஏதும் இல்லை என்பதையும் என்னால் வலியுறுத்தி கூற முடியும்,

கூறியாக வேண்டும். எனவே, ஒவ்வொரு அருள்பணியாளரும் மனம்மாறுவோரின் சிறப்பான ஒப்புரவு பயணத்தில் ஒரு வழிகாட்டியாகவும், உதவியாகவும், ஆறுதலாகவும் இருப்பாராக.

யூபிலி ஆண்டில் பல்வேறு காரணங்களுக்காக புனித பத்தாம் பயஸ் அருள்பணியாளர்கள் தோழமையைச் சார்ந்த அருள்பணியாளர்கள் தலைமையேற்கும் சபைக்கு செல்லும் இறைமக்கள் சட்டப் பூர்வமாக தங்களின் பாவங்களுக்கான அருளடையாள மன்னிப்பைப் பெறலாம் என்ற அனுமதியை வழங்கியிருந்தேன்.[15] இம்மக்களின் மேய்ப்புப் பணி நலன்களுக்காக, கத்தோலிக்க திரு அவையுடன் முழு ஒன்றிப்பை மீட்டெடுக்க கடவுளின் துணையோடு அவர்களின் அருள்பணியாளர்கள் முயல்கின்றார்கள் எனும் அவர்களின் நல்லெண்ணத்தை நம்பி, நான் தனிப்பட்ட முறையில் மறு ஏற்பாடு செய்யப்படும் வரை இந்த அனுமதியை நீட்டிப்பது என தீர்மானித்திருக்கின்றேன். இல்லையேல் திரு அவையின் மன்னிப்பின் வழி பெறும் ஒப்புரவின் அருளடையாளம் யாருக்காவது கிடைக்காமல் போகலாம்.

13. இரக்கத்தின் இன்னொரு முகம் *ஆறுதல்*. "ஆறுதல் கூறுங்கள்; என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்" (எசா 40:1) என்பது இறைவாக்கினர் இன்றும் தொடர்ந்து கூற விழையும் இதய வேண்டுகோள் ஆகும். இவ்வாறு துன்பத்தையும் வலியையும் அனுபவிக்கும் எல்லாருக்கும் நம்பிக்கையின் வார்த்தை வந்தடைவதாக. உயிர்த்த ஆண்டவர்மீது கொள்ளும் நம்பிக்கையால் வரும் எதிர்நோக்கு நம்மிடமிருந்து பறிக்கப்பட நம்மை நாம் அனுமதிக்காமல் இருப்போமாக. நாம் அடிக்கடி மிக மோசமாக சோதிக்கப்படுகின்றோம் என்பது உண்மைதான். ஆனால் ஆண்டவர் நம்மீது கொண்டுள்ள அன்பின் உறுதித் தன்மையை நாம் எப்போதும் இழந்துவிடக்கூடாது. அவரது இரக்கம், நம் துன்பம் மற்றும் சோதனை நேரங்களில் நம் சகோதரர் சகோதரிகள் பலர் நமக்கு அளிக்கும் நெருக்கம், பாசம் மற்றும் உற்சாகத்திலும் வெளிப்படுகின்றது. நாம் நம்மைச் சிக்க வைத்துள்ள தனிமை எனும் சுழற்சியிலிருந்து விடுபட்டு கண்ணீரைத் துடைப்பது ஒரு வழியாகும்.

நம் எல்லோருக்கும் ஆறுதல் தேவையாய் இருக்கின்றது. ஏனெனில் துன்பம், வலி மற்றும் புரிந்து கொள்ளப்படாமை ஆகியவற்றிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ளமுடியாது. பொறாமை, பகைமை அல்லது கோபத்தால் பிறக்கும் கெடுமதியான பேச்சுக்களால் எவ்வளவு வலிகள் ஏற்படுத்த முடியும்! நம்பிக்கைத் துரோகம், வன்முறை மற்றும் கைவிடுதல் ஆகிய அனுபவங்களால் எவ்வளவு துன்பங்கள் உருவாக்கப் படுகின்றன! அன்பு செய்கின்ற ஒருவரின் மரணத்தின்முன் எவ்வளவு துன்பம் உள்ளது. இருப்பினும் இத்துன்பம் மற்றும் சிக்கல்களின் நேரத்தில் கடவுள் நம்மிடமிருந்து தூரத்தில் இல்லை. திடப்படுத்தும் ஒரு சொல், நாம் புரிந்து கொள்ளப் படுகிறோம் எனும் உணர்வைத் தரும் ஒரு தழுவல், நாம் அன்பை அனுபவிக்க உதவும் ஒரு தட்டிக் கொடுத்தல், நம்மை திடப்படுத்தும் ஒரு இறைவேண்டல் . . . நம் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளால் அளிக்கப்படும் ஆறுதலின் வழியாக இவையெல்லாம் கடவுளின் நெருக்கத்தை நமக்கு உணர்த்துகின்றன.

சில நேரங்களில், குறிப்பாக துன்பப்படுவோரின் கேள்விக்கு பதிலளிக்க நாம் வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியாதபோது, *அமைதியாயிருத்தல்* பயனுடையதாயிருக்கும். வார்த்தைகளின் குறையை நம் உடன் இருப்போரின் பரிவு, நம்மை அன்பு செய்து நமது கரத்தைப் பற்றிக் கொண்டிருப்பது ஆகியவை நிறைவு செய்யும். அமைதியாயிருப்பது சரணடைவது அல்ல. மாறாக அது அன்பின் மற்றும் திடப்படுத்துதலின் நேரம். அமைதியாயிருப்பதன் வழி நாம் நம் சகோதரர் சகோதரிகளின் துன்பத்தில் பங்கெடுப்பதன் அடையாளமாயிருப்பதால் அது நமது ஆற்றுப்படுத்தும் மொழியின் அங்கமாக விளங்குகிறது.

14. நம் குடும்பங்கள் உட்பட பல சிக்கல்களால் நிறைந்திருக்கின்ற நம் காலங்களில், ஆறுதலும் திடமும் தரும் வார்த்தைகளை நமது குடும்பங்களுக்கு அளிப்பது முக்கியமானதாகும். தாராளமும் நம்பிக்கையும் மற்றும் பொறுமையும் உள்ள அன்பால் தம்பதியர், திருமணம் எனும் கொடையை வாழ, கிறிஸ்துவின் அருளால் அழைப்பு பெற்றிருக்கின்றனர். பல பிரச்சனைகள் மற்றும் மாற்று முன் மொழிவுகளையும் கடந்து குடும்பத்தின் அழகு மாறாமல் நிலைத்து நிற்கின்றது: "குடும்பங்களால் அனுபவிக்கப்படும் மகிழ்வு திரு அவையின் மகிழ்வாகவும் இருக்கின்றது"[16]. ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவரைச் சந்திப்பது, ஒருவர் மற்றவரை அன்பு செய்வது, இறை திருமுன் ஒருவர் மற்றவருக்கு நம்பிக்கை வாக்களிப்பது எனும் வாழ்வின் பயணம் பல நேரங்களில் துன்பம், துரோகம் மற்றும் தனிமை ஆகியவற்றால் இடையூறு

செய்யப்படுகின்றன. குழந்தைகள் கொடையாக அளிக்கப்படும் போது ஏற்படும் மகிழ்வு, அவர்களின் வளர்ச்சி, கல்வி பற்றிய கவலை மற்றும் வாழ்வின் நிறைவு ஆகியவற்றோடு இணைந்து பயணிக்கின்றது.

திருமண அருளடையாள அருள், குடும்பங்களை இரக்கத்தை செயல்படுத்தும் சிறப்பான இடங்களாக திடப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், குடும்பங்களின் உயர் மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிக்கின்ற பணியைச் செய்ய கிறிஸ்தவ குழுமங்களையும், அதன் அனைத்து மேய்ப்புப் பணி செயல்பாடுகளையும் கட்டாயப்படுத்துகின்றது. இந்த யூபிலி ஆண்டு இப்போதுள்ள குடும்ப வாழ்வின் பல்வேறு பரிமாணங்களைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. என்றும் வரவேற்கவும், உடன் பயணிக்கவும்[17] சோர்வடையாத கடவுளின் அன்பின் நிலைநின்று அனைத்து மானுட சிக்கல்களையும் பார்க்க இரக்கத்தின் அனுபவம் நமக்கு உதவுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் நமது தனிப்பட்ட வாழ்வின் வளங்களையும் சுமைகளையும் சுமந்து செல்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; இதுதான் நம்மை மற்ற எல்லாரிடமிருந்து தனிமைப்படுத்திக் காட்டுகின்றது. நமது வாழ்வு, அதன் மகிழ்வுகள் மற்றும் சோகங்களோடு, கடவுளின் இரக்கமிக்க பார்வையின் கீழ் நிகழும் தனித்துவமும், திரும்ப செய்ய முடியாததுமாய் அமைந்துள்ளது. இது சிறப்பாக அருள்பணியாளர்களிடத்தில் முன்னெச்சரிக்கையான, ஆழமான மற்றும் தொலைநோக்குடைய ஆன்மீக தேர்ந்து தெளிதலை எதிர்பார்க்கின்றது. இதனால் யாரும் ஒதுக்கப்படாமல் எல்லாரும், அவர்கள் எத்தகைய வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்தாலும், கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உணர முடியும்; சமூகத்தின் வாழ்வில் துடிப்புடன் பங்கெடுக்க முடியும்; நீதியும், அன்பும், மன்னிப்பும் மற்றும் இரக்கமும் கொண்ட அவரது ஆட்சியின் நிறைவை நோக்கி சோர்வின்றி பயணமாகும் இறைமக்கள் கூட்டத்தின் அங்கமாக இருக்க முடியும்.

15. இங்கும், நாம் *'இறப்பின் நேரத்தின்'* முக்கியத்துவத்தைக் காண்கிறோம். திரு அவை இந்த முக்கியமான நேரத்தை வரவிருக்கும் வாழ்வுக்கு வழியைத் திறந்துவிடும் இயேசுவின் உயிர்ப்பின் ஒளியிலே எப்போதும் அனுபவித்து வந்திருக்கின்றது. இன்றைய நிகழ்கால கலாச்சாரத்தில், இறப்பை ஒரு மாயையாகக் கண்டு அதை நாம் நம் கண்களிலிருந்து மறைக்க முயலும் சூழலில், நாம் பெரும் சவாலைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இருப்பினும், மரணம் என்பது துன்பமான மற்றும் தப்பிக்க முடியாத நிகழ்வு எனும் வகையில் அது சந்திக்கப்பட வேண்டும்; அதற்காக தயாராகவும் இருக்க வேண்டும். அதே வேளையில், இது நாம் பின்னே விட்டு செல்பவர்கள்மீதும், நாம் சந்திக்க செல்லும் கடவுள்மீதும், காட்டும் இறுதியான அன்பின் வெளிப்பாடாகவும், மிகவும் பொருள் பொதிந்தாகவும் உள்ளது. எல்லாச் சமயங்களிலும், பிறப்பு நிகழ்வைப் போலவே, இறப்பின் வேளையும் சமயச் சடங்குகளுடன் தொடர்புடையது. கிறிஸ்தவர் களாகிய நாம், இறுதிச் சடங்கு வழிபாட்டை இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு எதிர்நோக்கு நிறைந்த இறைவேண்டலாகவும், தங்களின் அன்புக்குரியவர்களை இழந்து துன்புறுவோர்க்கு ஆறுதல் தருவதற்காகவும் நடத்துகின்றோம்.

இது குறித்து நான் உறுதியாயிருக்கிறேன். அதாவது, நமது நம்பிக்கை நிறைந்த மேய்ப்புப் பணி செயல்பாடுகளும் நம் வேண்டல்களும் ஆண்டவரின் இரக்கத்தின் வெளிப்பாடுகளாக இருப்பதன் நேரடி அனுபவங்களுக்கு இட்டுச் செல்கின்றன. எதுவும், யாரும் ஆண்டவரின் அன்பினின்று எப்போதும் பிரிக்க முடியாது என்பதால் (காண். உரோ 8:35) ஆண்டவரே எதிர்நோக்கு நிறைந்த வார்த்தைகளை நமக்குத் தருகின்றார். அருள்பணியாளர்கள் இத்தகைய நேரத்தில் பங்கெடுப்பது, மேய்ப்புப்பணி அக்கறையின் முக்கியமான அடையாளம் ஆகும். ஏனெனில் உதவியற்றநிலை, தனிமை, நிச்சயமற்ற தன்மை மற்றும் வேதனையான நேரத்தில் கிறிஸ்தவ இறைச் சமூகத்தின் நெருக்கத்திற்கு இது உதவுகின்றது.

16. யூபிலி இப்போது நிறைவுறுகின்றது; புனித கதவு மூடப் படுகின்றது. ஆனால் நமது இதய இரக்கத்தின் கதவு தொடர்ந்து அகல திறந்தே இருக்கின்றது. கடவுள் நம்மை நோக்கி சாய்ந்து இறங்கி வந்தார் (காண். ஓசே 11:4) என்று கற்றிருக்கிறோம். இதனால் நம் சகோதரர்கள் சகோதரிகள் பால் இறங்கி கடவுளைப் பின்பற்றுவோமாக. தம் மக்கள் தம்மிடம் திரும்பி வருவதை எதிர்நோக்கியிருக்கும், தந்தையின் இல்லத்திற்கு திரும்ப வர ஏங்கும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் ஏக்கம் கடவுளின் மென்மைத் தன்மைக்கு அளிக்கப்பட்ட இதயப் பூர்வமான மற்றும் தாராளமான சாட்சியங்களால் உயிர்ப்பிக்கப் பட்டுள்ளது. யூபிலி ஆண்டில் நாம் கடந்து சென்ற

புனித கதவு நம்மைப் *பிறரன்பின் பாதையில்* நடக்கச் செய்துள்ளது. இப்பயணத்தை உண்மையோடும் மகிழ்வோடும் நாள்தோறும் மேற்கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். இது இரக்கத்தின் பாதையாகும். இதில் யாராவது தங்களின் கரங்களைப் பற்றி தமது வழியில் துணையாக இருக்க மாட்டார்களாக எனத் தேடும் நம் சகோதரர்கள் சகோதரிகள் பலரை நாம் சந்திக்கின்றோம்.

கிறிஸ்துவோடு நெருங்கியிருக்க வேண்டும் எனும் ஆசை நம் சகோதரர்கள் சகோதரிகளோடு நெருங்கி வரவேண்டியதை அவசியமாக்குகின்றது. ஏனெனில் உண்மையான இரக்கத்தின் அடையாளத்தைவிட தந்தையாகிய இறைவனுக்கு மகிழ்வளிப்பது ஏதுவும் இல்லை. தன் இயல்பிலே இரக்கம் குறிப்பிட்ட மற்றும் ஆற்றலுள்ள செயல்பாடுகளில் காணக்கூடியதாகவும் உணரக் கூடியதாகவும் இருக்கின்றது. ஒருமுறை உண்மையிலேயே அனுபவிக்கப்பட்ட பிறகு அதிலிருந்து திரும்பிச் செல்வது என்பது இயலாது. அது தொடர்ந்து வளர்கின்றது, மற்றும் நமது வாழ்வை மாற்றுகின்றது. இது உண்மையான புது படைப்பு: முழுமையாக அன்பு செய்யக்கூடிய புதிய இதயத்தை அது உருவாக்குகின்றது மற்றும் மறைந்திருக்கும் தேவைகளையும் பார்க்க நம் கண்களைத் தூய்மைப்படுத்துகின்றது. “கடவுளே, மானிட இயல்பை வியப்புக்குரிய விதத்தில் படைத்தீர், இன்னும் வியப்புக்குரிய விதத்தில் அதை மீட்டீர்”[18] என்று பாஸ்கா திருவிழிப்பின்போது படைப்புப் பற்றிய வாசகத்திற்குப் பின் திரு அவை வேண்டுவது எவ்வளவு உண்மையானது.

இரக்கம் *புதுப்பிக்கின்றது, மற்றும் மீட்கிறது*. ஏனெனில் அது மனித இதயத்தைச் சந்திக்க வருகிற கடவுளின் இதயம் என இதயங்களின் சந்திப்பாகும். மனித இதயம் இறைவனின் இதயத்தால் கதகதப்பாக்கப்பட்டு நலமாக்கப்படுகின்றது. நமது கல்லான இதயம் நமது பாவநிலையையும் தாண்டி அன்பு செய்யக்கூடிய சதையாலான இதயமாக மாறுகின்றது (காண். எசே 36:26). நான் உண்மையாகவே “புது படைப்பு” (கலா 6:15) எனும் அறிதலுக்கு வருகிறேன்: நான் அன்பு செய்யப்படுகிறேன், எனவே நான் இருக்கிறேன்; நான் மன்னிக்கப்படுகிறேன், எனவே நான் மீண்டும் பிறந்துள்ளேன்; நான் இரக்கம் காட்டப்படுகிறேன், எனவே நான் இரக்கத்தின் பாத்திரமாகின்றேன்.

17. யூபிலி ஆண்டின் போது, குறிப்பாக இரக்கத்தின் வெள்ளிக் கிழமைகளில், உலகில் உள்ள நன்மைத்தனத்தை காணக்கூடிய விதத்தில் என்னால் அனுபவிக்க முடிந்தது. இது அன்றாடம் மறைவான மற்றும் அமைதியான செய்கைகளால் வெளிப்படுத்தப்பட்டதால் பல நேரங்களில் அது மறைந்தே உள்ளது. அரிதாக விளம்பரப்படுத்தப்பட்டாலும், பல நன்மை பயக்கும் மென்மையான நற்செயல்கள் வலியவர்களுக்கும், பலவீனர்களுக்கும், தனிமையிலிருப்பவர்களுக்கும், கைவிடப்பட்டவருக்கும் செய்யப்பட்டன. ஏழைகள் மற்றும் மகிழ்ச்சிக்குன்றியவர்களுக்குத் தொடர்ந்து தங்கள் தோழமையைக் காட்டிய உண்மையான பிறரன்பு வீரர்கள் இருக்கிறார்கள். மானிட பலவீனத்தின் காயப்பட்ட நிலையை நோக்கி ஈர்க்கப்படும் மகிழ்வைக் கண்டடைய நம்மை அழைக்கும் இந்த மதிப்பில்லா கொடைகளுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். கடவுளின் உடனிருப்பையும் நெருக்கத்தையும் காண்பிப்பதில் தங்களின் நேரத்தையும் முயற்சிகளையும் நாள்தோறும் செலவிட்ட பல தன்னார்வ தொண்டர்களை நன்றியோடு நினைக்கின்றேன். அவர்களின் பணி உண்மையான இரக்கச் செயல், திரு அவைக்கு அருகில் பல மக்களை ஈர்க்க அது உதவுகின்றது.

18. இரக்கத்தின் படைப்புத் திறனையும் கட்டவிழ்த்து விடும் நேரம் இது, அருளின் பயனைப் பற்றிய புதிய புரிதலைக் கொணரும் நேரம். இன்று திரு அவை, இயேசு செய்த, “திரு நூலில் எழுதப்படாத”, “வேறு பல அடையாளங்களையும்” (யோவா 20:30) அறிவிக்க வேண்டியுள்ளது. திரு அவையும் கிறிஸ்துவின் பயன்தரும் அன்பின் அடையாளமாகவும், அவரிடமிருந்து தன் வாழ்வைப் பெற்றுக் கொள்ளும் சமூகத்தின் வலியுறுத்தும் அடையாளங்களாக அமையும். இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இருப்பினும் இரக்கச் செயல்கள் கடவுளின் நன்மைத் தனத்தை தொடர்ந்து காணக் கூடியதாக்குகின்றன.

நமது காலத்திலும் மக்கள் இனங்கள் பலவும் பசியாலும் தாகத்தாலும் துன்புறுகின்றன. குழந்தைகள் உண்பதற்கு ஏதுமில்லாத நிலை பற்றிய படங்களைக் கண்டு அலைகழிக்கப் படுகின்றோம். பெரும்திரளான மக்கள் உணவு, வேலை, தங்குமிடம் மற்றும் அமைதித் தேடி ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு தொடர்ந்து இடம் பெயர்கின்றனர். துன்பத்திற்கு தொடர்ந்து பல்வகைப்பட்ட நோய்கள் காரணமாயிருக்கின்றன. இந்த துன்பமானது உதவி, ஆறுதல் மற்றும்

பலப்படுத்துதல் ஆகியவை தேவை என்று குரலெடுத்து கூவுகின்றது. எங்கும் பரந்திருக்கும் கல்லாமை, சிறார்கள் தங்களின் முழுதிறனையும் வெளிக் கொணராமல் தடுத்து, அவர்களைப் புது வகையான அடிமைத்தனத்திற்கு ஆட்படுத்துகின்றது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் காணப்படும் அதிக அளவிலான தனி நபர் முக்கியத்துவம் பிறரோடு தோழமையையும், பிறருக்கு பொறுப் பேற்பதையும் இழக்க காரணமாயுள்ளது. இன்று நிறைய மனிதர்கள் கடவுளைப் பற்றிய அனுபவமே இல்லாமல் உள்ளனர். இதுவே பெரும் வறுமையாகவும் மாற்றமுடியாத மனித மாண்புக்கு பெரிய தடையாகவும் உள்ளது.

முடிவாக, உடல் சார்ந்த இரக்கச் செயல்களும், ஆன்மீக இரக்கச் செயல்களும் இன்றும், *சமூக மதிப்பீடு* எனும் வகையில் இரக்கத்தின் அளவில்லா நேர்மறைத் தாக்கத்தின் சான்றாக உள்ளன. இரக்கம் நமது இடையை வரிந்து கட்டிக்கொண்டு இலட்சக்கணக்கான மக்களின் மாண்பை மீட்டெடுக்கும் செயலில் ஈடுபட நம்மைக் கட்டாயப்படுத்துகின்றது. அவர்கள் நம் சகோதரர்கள் சகோதரிகள், நம்மோடு சேர்ந்து, “நிலையான நகரை”[(19)] கட்டியெழுப்ப அழைக்கப்பட்டவர்கள்.

19. புனித ஆண்டில் பல காணக்கூடிய இரக்க அடையாளங்கள் நிகழ்த்தப்பட்டன. குழுமங்கள், குடும்பங்கள் மற்றும் தனி நபர்கள் பகிர்வதன் மகிழ்வையும் உடனிருப்பின் அழகையும் கண்டுபிடித்தன. ஆனால் அது போதுமானதல்ல. நமது உலகம் மனித மாண்பைத் தாக்கும் புது வகையான ஆன்மீக மற்றும் பொருளாதார ஏழ்மையைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டேயிருக்கின்றது. இக்காரணத்தால், திரு அவை எப்போதும் விழிப்பாயிருந்து, புதிய இரக்கச் செயல்களை இனம் காண வேண்டும், மற்றும் அவற்றைத் தாராள மனதுடனும் உற்சாகத்துடனும் செயல்படுத்த வேண்டும்.

எனவே பிறரன்பு செயல்களையும் இரக்கத்தின் செயல்பாடு களையும் செயல்படுத்தும் குறிப்பிட்ட கூர்மதியான வழிகளை கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோமாக. இரக்கம் அனைத்தையும் உள்ளடக்கக் கூடியது; எல்லைகள் ஏதுமின்றி காட்டுத் தீ போல பரவக் கூடியது; எனவே மரபுக்கு உரிய இரக்கச் செயல்களுக்கு நாம் புதிய வடிவம் கொடுக்க அழைக்கப்படுகின்றோம். ஏனெனில் இரக்கம், பொங்கி வழிவது, முன்னோக்கி போவது, பெரும் பயன் விளைவிக்கக் கூடியது. அது மாவு முழுவதையும் புளிப்பேற்றும் புளிப்பு மாவைப் போன்றது (காண். மத் 13:33) அல்லது மரமாக வளரக்கூடிய கடுகு விதை போன்றது (காண் லூக் 13:19). நாம் “ஆடையற்றவரை உடுத்துதல்” (காண். மத் 25:36, 38, 43, 44) எனும் இரக்கச் செயல் பற்றி சிந்திக்க வேண்டும். இது நம்மைத் தொடக்கத்திற்கு, ஏதேன் தோட்டத்திற்கு, இட்டுச் செல்கிறது. அங்கே ஆதாமும் ஏவாளும் தாங்கள் நிர்வாணமாய் இருந்ததாக உணர்ந்தார்கள், ஆண்டவர் அருகில் வருவதைக் கேட்டபோது வெட்கப்பட்டு தங்களை மறைத்துக் கொண்டார்கள் (தொநூ 3:7–8). கடவுள் அவர்களைத் தண்டித்தார் என அறிவோம். இருப்பினும் அவர், “மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார்” (தொநூ 3:21). அவர் அவர்களின் நிர்வாணத்தை மறைத்து மாண்பை மீட்டுத் தந்தார்.

கொல்கொதாவில் தொங்கிய இயேசுவையும் நினைத்துப் பார்ப்போம். இறைமகன் சிலுவையில் நிர்வாணமாய் தொங்குகின்றார்; படை வீரர்கள் அவரது ஆடையை எடுத்து அதற்காக சீட்டுப் போட்டுப் பார்க்கின்றனர் (காண். யோவா 19:23–24). அவரிடம் ஒன்றும் விடப்படவில்லை. வாழ்வின் அடிப்படைத் தேவைகள் இழந்ததால் தங்களின் மாண்பை இழந்தவர்களின் நிலையை இயேசு பகிர்ந்து கொண்டதன் உச்சக்கட்ட வெளிப்பாடுதான் சிலுவை. திரு அவை “கிறிஸ்துவின் ஆடையாய்”[(20)] இருக்க அழைக்கப்பட்டு, அவளது ஆண்டவரை மீண்டும் அணிவிக்க அழைக்கப்பட்டது போல, உலகின் நிர்வாணமானவர்களுக்கு அவர்களின் பிடுங்கப்பட்ட மாண்பினை மீட்டுத்தர உதவும் தோழமையில் தன்னை அர்ப்பணித்துள்ளது. “நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்” (மத் 25:36) எனும் இயேசுவின் வார்த்தைகள், தங்களின் வாழ்வை மாண்புடன் வாழ தடுக்கப்பட்டுள்ள புதிய வகையான ஏழ்மை மற்றும் ஒதுக்கு முறைகளுக்கு ஆளானவர்களுக்கு நமது முதுகைக் காட்டாமல் இருக்க கட்டாயப்படுத்துகிறது.

வேலையின்றி இருப்பது அல்லது தேவையான ஊதியமின்றி இருப்பது; வீடு இல்லாமல் இருப்பது; அல்லது வாழ்வதற்கு நிலம் இல்லாமல் இருப்பது; ஒருவரின் சமய நம்பிக்கை, இனம் மற்றும் சமூக நிலை ஆகியவற்றிற்காக ஒதுக்குதலை அனுபவிப்பது, ஆகியவையெல்லாம் ஒரு மனிதரின் மாண்பினைச் சிதைக்கும் பல சூழல்களுள் சிலவே. இத்தகைய தாக்குதல்களில்

கிறிஸ்தவ இரக்கம் எல்லாவற்றிற்கும் மேலாக விழிப்புடனும் தோழமையுடனும் பதிலிருக்கின்றது. இன்று தனி நபர்களுக்கு மாண்பை மீட்டுத் தந்து உண்மையான மானுட வாழ்வை வாழச் செய்ய வேண்டிய எத்தனையோ சூழல்கள் இருக்கின்றன! அனைத்திற்கும் மேலாக, தங்களின் வாழ்வில் மகிழ்வு பிடுங்கப்பட்டு பலவகை வன்முறை களால் துன்புறும் பல சிறார்களை நினைத்துக் கொள்வோம். நிகழ்கால உலகின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படும்படி நமது உதவிக்காக அவர்கள் வேண்டுகின்றனர். இந்த சிறார்கள் நாளைய இளைஞர்கள், முதியவர்கள். நாம் அவர்கள் மாண்புடனும் பொறுப்புடனும் வாழ எவ்வாறு அவர்களைத் தயாரிக்கின்றோம்? தங்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எத்தகைய எதிர்நோக்குடன் அவர்கள் எதிர்கொள்ள முடியும்?

இரக்கத்தின் *சமூக பண்பு* நாம் வெறுமனே நின்றுகொண்டு ஒன்றும் செய்யாமல் வேடிக்கை பார்க்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றது. அது நமது கண்டுகொள்ளாத் தன்மையையும், வெளி வேடத்தையும் அழிக்க அழைக்கின்றது. இல்லையேல் நமது திட்டங்களும், ஏற்பாடுகளும் செத்த எழுத்துக்களாகவே நின்றுவிடும். கடவுளின் அரசின் இருப்புக்கு சாட்சிகளாக திகழ விரும்புவோரில் காணக்கூடிய கடப்பாடாக, நீதியையும் மாண்புடைய வாழ்வையும் ஏற்படுத்த துடிப்புடனும் சுய நலமின்றியும் உழைக்க தூய ஆவி நமக்கு உதவுவாராக.

20. பிறருடன் நாம் சந்திப்பு நிகழ்த்தி கண்டறிந்ததன் அடிப்படையில் நாம் *இரக்கத்தின் கலாச்சாரத்தை* வளர்த்தெடுக்க அழைக்கப்படுகின்றோம். இக்கலாச்சாரத்தில் யாரும் அடுத்தவரை கண்டுகொள்ளாமையோடு நோக்கமாட்டார்கள் அல்லது நம் சகோதரர்கள் சகோதரிகளின் துன்பங்களிலிருந்து தூர விலக மாட்டார்கள். இரக்கத்தின் செயல்கள் “கைவேலைப்பாடுகள்.” அதாவது அவை எதுவும் மற்றது போன்றது அல்ல. நம் கரங்கள் அவற்றை ஆயிரக்கணக்கான வித்தியாசமான முறையில் செய்ய முடியும். ஒரே கடவுள் அவற்றிற்கு ஏவுதலாக இருந்தாலும், அவை ஒரே “மூலப்பொருளால்” உருவாக்கப்பட்டாலும், இரக்கம் தன்னிலே, ஒவ்வொன்றும் ஒரு வடிவம் எடுக்கின்றது.

இரக்கச் செயல்கள் ஓர் ஆளின் முழு வாழ்வையும் பாதிக்கின்றது. இந்த காரணத்திற்காக, மக்களின் வாழ்வை அதாவது அவர்களின் உடலையும் உள்ளத்தையும் தொடுகின்ற சிறு சிறு செயல்பாடுகள் தொடங்கி நாம் ஓர் உண்மையான கலாச்சார புரட்சியைத் தோற்றுவிக்கலாம். கிறிஸ்தவ சமூகம் ஏற்க வேண்டிய கடமை இதுதான். பிரச்சனைகளிலிருந்து விடுபட்ட சொகுசான வாழ்வு வாழும் நோக்குடன், கண்டுகொள்ளாத் தன்மை மற்றும் தனிமை எண்ணம் ஆகியவையின் பின் பதுங்கிக் கொள்ளும் சோதனையை விட்டொழிக்க கடவுளின் வார்த்தை நம்மை தொடர்ந்து அழைக்கின்றது எனும் புரிதலில் இது செய்யப்பட வேண்டும். “ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள்” (யோவா 12:8) என்று தம் சீடர்களுக்கு கூறுகின்றார். இயேசுவே ஏழையர் ஒவ்வொருவருடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்க, ஏழைகள் சார்பாக செயல்படுவதிலிருந்து சாக்குபோக்கு சொல்லி தப்பித்துக் கொள்ள வழியில்லை.

இரக்கத்தின் கலாச்சாரம் இடைவிடா இறைவேண்டலிலும், தூய ஆவியின் செயல்பாட்டுக்கு அமைந்திருப்பதிலும், புனிதர்கள் வாழ்வை அறிந்திருப்பதிலும், ஏழைகளோடு நெருக்கமாக இருப்பதிலும் உருவாக்கப்படுகின்றது. நமது ஈடுபாட்டை எதிர் பார்க்கின்ற சூழல்களில் அவற்றை உதாசினப்படுத்தக் கூடாது என கட்டாயப்படுத்துகிறது. இரக்கத்தைப் “பற்றி” கருத்தாடல் செய்யும் சோதனையை மேற்கொள்ள, நமது அன்றாட வாழ்வு பங்கெடுப்பதாகவும் பகிர்வதாகவும் அமைய வேண்டும். பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரைத் தன் மனமாற்றத்திற்குப்பின் திருத்தூதர் பவுல் சந்தித்ததைப் பற்றி கூறுவதை நாம் மறத்தலாகாது. அவரது வார்த்தைகள் நமது பணிக்கும் கிறிஸ்தவ வாழ்வு முழுவதற்குமான அடிப்படை கூற்றை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன: “ஏழைகளுக்கு உதவி செய்ய மறக்கவேண்டாம் என்று மட்டும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதைச் செய்வதில்தான் நான் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தேன்.” (கலா 2:10). நாம் ஏழையரை மறத்தலாகாது; இது என்றும் போல இன்றும் பொருளுள்ள ஒரு கட்டளை. அதன் நற்செய்தி அதிகாரத்தின்படி நம்மை கட்டாயப்படுத்துகின்ற ஒன்று.

21. திருத்தூதர் பேதுருவின் வார்த்தைகளை யூபிலி நம்முள் பதிய வைக்கின்றது: “முன்பு இரக்கம் பெறாதவர்களாய் இருந்தீர்கள்; இப்பொழுதோ இரக்கம் பெற்றுள்ளீர்கள்.” (1 பேது 2:10). நாம் பெற்றுக்கொண்டதைப் பொறாமையோடு நமக்கென வைத்துக் கொள்ளாமல் நமது துன்புறும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளோடு பகிர்ந்து கொள்வோமாக! இதனால் அவர்கள் இறைத்

தந்தையின் ஆற்றலால் பாதுகாக்கப்படுவார்கள். நம் சமூகங்கள் தங்களிடையே வாழ்பவர்களை நோக்கிச் செல்வனவாக, இவ்வாறு நம்பிக்கையாளரின் சான்றால் கடவுளின் தொடுதல் ஒவ்வொருவரையும் சென்றடைவதாக.

*இது இரக்கத்தின் காலம்.* நமது பயணத்தின் ஒவ்வொரு நாளும் கடவுளின் உடனிருப்பால் அடையாளப்படுத்தப் படுகின்றது. நம் இதயங்களை அன்பு செய்யக்கூடியதாக மாற்றும்படி தூய ஆவி பொழியும் அருளின் ஆற்றலோடு அவர் (கடவுள்) நம் பயணத்தை வழிநடத்துகின்றார். ஒவ்வொருவருக்கும் மற்றும் எல்லாருக்கும் *இது இரக்கத்தின் காலம்.* எவரும் தான் கடவுளின் நெருக்கத்திலிருந்தும் அவரின் மென்மையான அன்பின் ஆற்றலிலிருந்தும் வெட்டி விடப்பட்டதாக நினைக்க முடியாது. *இது இரக்கத்தின் காலம்.* ஏனெனில் வலியவரும், பலவீனரும், தூரத்திலிருப்பவரும், தனிமையில் இருப்பவரும், தங்களின் தேவையில் தங்களுக்கு உதவும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் உடனிருப்பை உணர வேண்டும். *இது இரக்கத்தின் காலம்.* ஏனெனில் கண்டு கொள்ளாத்தன்மையை மேற்கொண்டு வாழ்வில் அவசியமானது எது எனக் கண்டு பிடித்தவர்கள் தாங்கள் மதிப்போடும் அக்கறையோடும் நடத்தப்படுகிறார்கள் என ஏழையர் உணர வேண்டும். *இது இரக்கத்தின் காலம்.* ஏனெனில் எந்த பாவியும் மன்னிப்பு கேட்பதில் சோர்வடையக்கூடாது; மற்றும் எல்லோரும் இறைத்தந்தையின் வரவேற்கும் அரவணைப்பை உணரலாம்.

எல்லா பேராலயங்களிலும், உலகின் திருத்தலங்களிலும் புனிதக் கதவுகள் மூடப்படும்போதும், "சமூகத்தின் ஒதுக்கப் பட்டோரின் யூபிலியின்" போதும், இந்த சிறப்பு யூபிலி ஆண்டின் இன்னொரு காணக்கூடிய அடையாளமாக, ஆண்டின் பொதுக் காலத்தின் முப்பத்து மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையைத் திரு அவை முழுவதும் *உலக ஏழையர் நாளாக* கொண்டாட வேண்டும் என்பது எனது எண்ணம். சிறுவர்களோடும் ஏழைகளோடும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவரும், நமது இரக்கச் செயல்களின் அடிப்படையில் நம்மைத் தீர்ப்பிட இருக்கிறவருமான (காண். மத் 25:31–46), அனைத்துலக அரசர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெருவிழாவை கொண்டாடுவதற்கு இது தகுந்த தயாரிப்பாக அமையும். அது நமது சமூகத்திற்கு உதவும் நாளாக அமையும். அதோடு, எவ்வாறு ஏழ்மை நற்செய்தியின் இதயமாக இருக்கின்றது, லாசர் நமது வீட்டு வாயிலருகே கிடக்கும்போது (காண். லூக் 16:19–21) நீதியும் சமூக அமைதியும் இருக்கமுடியாது என திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் சிந்திக்க வாய்ப்பாக அமையும். திரு அவை தனது நீடித்த செயல்பாடாகிய மேய்ப்புப் பணி மனமாற்றத்திலும் இரக்கத்தின் சான்றிலும் நிலைத்திருந்து தனது முகத்தைப் புதுப்பிக்க முயலும் புதிய நற்செய்திப் பணியின் (காண். மத் 11:5) நேர்மையான அடையாளமாக இந்த நாள் அமையும்.

22. தூய கடவுளின் தாய் நம்மை எப்போதும் தன் இரக்கத்தின் கண்களால் காண்கிறார். நமக்கு வழிகாட்டுவதிலும், நமது அன்பின் சான்றில் நம் உடன் நடப்பதிலும் அவர் எப்போதும் முதலில் இருக்கிறார். ஓவியங்களில் அடிக்கடி காட்டப்படுவது போல, இரக்கத்தின் அன்னை நம் அனைவரையும் அவரது பாதுகாக்கும் துகிலின் கீழ் ஒன்றுசேர்க்கின்றார். அவரது தாய்மைக்குரிய உதவியை நம்புவோம். கடவுளின் இரக்கத்தின் ஒளிரும் திருமுகமாகிய இயேசுவைக் காண அவர் தரும் நீடித்த ஆலோசனையைப் பின்பற்றுவோம்.

உரோமையில், புனித பேதுரு பேராலயத்தில், நவம்பர் 20–ஆம் தேதி, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அனைத்துல அரசர் பெருவிழாவில், 2016–ஆம் ஆண்டு எனது பாப்பிறை ஆளுகையின் நான்காம் ஆண்டு அளிக்கப்பட்டது.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

தமிழாக்கம்

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**

முப்பணி மையம், திண்டிவனம்

ajbaptist@gmail.com